## 19. தலைப்பு 17 – பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்

### 19.1 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

அலுவலகத்திற்கு முன்னைய ஆண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

### 19.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

ஆறு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 19.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 19.3.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 19.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 19.4 இணங்காமை

#### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 (அ) உப பந்தி | 34,000 | பதினேழு உத்தியோகத்தருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளை விஞ்சி சீருடைப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(i) உப பந்தி | - | அலுவலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தமது சேவை நிலையத்திற்கு வருகை தருதலும் வெளிச் செல்லுதலும் கைவிரல் அடையாளக் குறிப்பு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (iv) ஆம் உப பந்தி | - | நித்திய கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்பட்ட படிகளுக்காக வருகை மற்றும் வெளிச் செல்கை நேரங்கள் கைவிரல் அடையாளக் குறிப்பு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | 428,355 | கலந்துரையாடல், மாநாடு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய சகல கடமைப் பிரமாணங்களுக்கும் வெளி நாடு செல்கின்ற சகல உத்தியோகத்தர்களும் நிதியத்திலிருந்து செலவினங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், விமானப் பயணச் சீட்டுக்கள் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் கம்பனியிலிருந்து அல்லது மிஹின் லங்கா (தனியார்) கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்படாமல் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 19.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2001 யூலை 04 ஆந் திகதிய 11/575/ஈ/195/2 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் உத்தியோகபூர்வ கூடங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஆண்டொன்றிற்கு 2 காற்சட்டை வீதமும் டியூனிக் கொலருடன் 2 சேர்ட்கள் வீதமும் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக, பிரதான முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கும், 06 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கும் பெண் ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 6,000 வீதம் ரூபா 48,000 செலுத்தப்பட்டிருந்தது. அனுசரணைப்படியாக ரூபா 3,000 முதல் ரூபா 3,500 இற்கிடையே மாதாந்தப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தும் இவ்வாறு சீருடைப் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 19.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அலுவலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அலுவலகத்தினால் சீராக்கப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 4.3.3 | வருகையையும் வெளிச்செல்கையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| 2013 | 4.3(அ)(i) | 2004 ஆம் ஆண்டு முதல் 04 சந்தர்ப்பங்களில் வருடாந்த சம்பள அதிகரிப்பிற்கு மேலதிகமாக 10 சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. |

## 19.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 08 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 11 | 03 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 31 | 26 | 05 |